TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213017

1. District மாவட்டம் : Vellore PS: காவல் நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2024 FIR No. மு.த.அ. எண் 05/2024 Date: நாள் 20.06.24

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act-2018 Sections பிரிவுகள்: U/s 7 (a)
(ii) Act சட்டம்: Cr. P.C Sections பிரிவுகள்: U/s 102
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 19.06.2024 Date from : நாள் முதல் Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 19.06.2024 Time to : நேரம் வரை 17.00 Hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 20.06.2024 Time : நேரம் 05.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD Vol-I Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Office of the Sub. Registrar Katpadi about 8 KM North
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. Booma (b) Father's/ ~~Husband~~'s Name தந்தை / கணவர் பெயர் S.R. Vaikuntam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 4.6.1972 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம் O/o the Inspection Cell Office.
(f) Occupation : தொழில் Deputy Inspection Cell Officer (g) Address : முகவரி (O/o / C/o Deputy Inspection Cell Officer) Collectorate, Sathuvachari, Vellore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
G. Nithiyanandam, Sub Registrar
Sub Registrar Office Katpadi
Vellore District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

– Separate Sheet Enclosed –

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 20/6/24 (V. BOOMA)

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு Deputy (Co), Vellore

Signature of the Officer-in-charge, Police Station [signature] 20/06/2024
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
20.06.2024 @ 06.00Hrs

Name: பெயர் S. Vijay
Rank: நிலை ......................No. எண் ..........
Inspector of Police, Vigilance and Anti-Corruption, Vellore.

**Submitted:**

**Column (12) in Vellore Vigilance and Anti Corruption Crime No.05/2024 u/s 7(a) of Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 102 Cr.P.C.,**

| எதிரி | |
|---|---|
| திரு.G.நித்யானந்தம்,<br>த/பெ கோபால்(லேட்)<br>சார்பதிவாளர் (பொறுப்பு)<br>சார் பதிவாளர் அலுவலகம்,<br>காட்பாடி,<br>வேலூர் மாவட்டம் | இன்று 20.06.2024 காலை 04.45 மணிக்கு வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் வேலூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.V.பூமா அவர்கள் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரினை காவல் துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்கள் பெற்று என்னிடம் வழக்கு பதிவு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள கொடுத்த உத்தரவின் பேரில் மேற்படி புகாரினை பெற்று பார்க்க அதன் விவரம் பின்வருமாறு: |

அனுப்புநர், V.பூமா, துணை ஆய்வுக்குழு அலுவலர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9 பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, நான் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு துணை ஆய்வுக்குழு அலுவலராக உள்ளேன். கடந்த 19.06.2024-ஆம் தேதி 17.00 மணியளவில், நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, காட்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியம் சார்பதிவாளர் திரு.நித்யானந்தம் என்பவர் பத்திரம், பிற பதிவுகள் மற்றும் சான்றிதழ்கள் பெற வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக பதிவு செய்யப்படும் பத்திர மதிப்புகளுக்கு ஏற்பவும், அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைதரகர்கள் (புரோக்கர்கள்) மூலமும் கையூட்டு பெறுவதாகவும், மற்றும் இடைத்தரகர்கள், ஆவண எழுத்தர்கள் மேற்படி அலுவலகத்தில் ஆதிக்கம் செலுத்துவதாகவும் எனக்கு கிடைக்க பெற்ற நம்பகமான தகவலை நான் என்னுடைய தகவலர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக்காவல் கண்காணிப்பாளர் திரு.S.சங்கர் மற்றும் காவல் ஆய்வாளர் திரு.S.விஜய் ஆகியோருக்கு தகவல் தெரிவித்து, வேலூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினருடன் மாலை 18.00 மணிக்கு வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு, காட்பாடி சார் பதிவாளர் அலுவலக வளாகத்தில் இரு துறை திடீர் சோதனை மேற்கொள்ள மாலை சுமார் 18.30 மணிக்கு வந்து சேர்ந்து, மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தை குழுவினருடன் கண்காணித்துக்கொண்டிருந்தபோது, பொது மக்கள் சிலர் சார் பதிவாளர் அலுவலகத்திற்குள்ளேயும், அலுவலக வளாகத்திலும் காத்திருந்தனர். அதன்பிறகு சுமார் 19.15 மணிக்கு மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனை குழுவினர்

சார்பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே சென்று பார்த்த போது அங்கிருந்த சார்பதிவாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள், இடைதரகர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர்களிடம் என்னையும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டும், சோதனைக்கு வந்த நோக்கத்தை தெரிவித்து, சார் பதிவாளர் அவர்களை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் நித்யானந்தம் என்றும், 20.12.2023 ஆம் தேதி முதல் காட்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் பொறுப்பு சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர், திரு.G.நித்யானந்தம், சார் பதிவாளர் மற்றும் ஆஜரில் இருந்த அலுவலர்கள் முன்பாக சோதனைக்கு சென்ற நாங்கள் எங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டும் எங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. காட்பாடி சார் பதிவாளர் அலுவலக கட்டிடமானது வேலூர் மாவட்டம் சித்தூரிலிருந்து வேலூர் வரும் சாலையில், காட்பாடி பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் மேற்கு பார்த்த மெயின் கேட் அமைந்துள்ளது. அந்த கேட்டின் வழியே உள்ளே நுழைய வடக்கு பார்த்த வாயிலை கொண்ட சார் பதிவாளர் அலுவலக அறை சுமார் 26X20 அளவுள்ளதாக உள்ளது. அந்த அறையில் தெற்குபக்க சுவற்றினை ஒட்டியவாறு வடக்கு நோக்கியவாறு சார் பதிவாளருக்கான மேஜை மற்றும் நாற்காலி போடப்பட்டிருந்தது. மேற்படி சார் பதிவாளர் திரு.நித்யானந்தம் அவர்களை சோதனை மேற்கொள்ள அவரிடம் பணம் ரூ.318/- இருந்தது. அந்த பணம் தனது சொந்த செலவிற்காக எடுத்து வந்ததாகவும், அந்த பணத்தை சார் பதிவாளர் அலுவலக தனி நபர் பண இருப்புப்பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாக சொன்னதால், அந்த பணம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறையினை சோதனை செய்ய வழக்கு சம்மந்தமான பணமோ ஆவணங்களோ ஏதும் இல்லை. பின்னர், மேற்படி காட்பாடி சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த அலுவலக பணியாளர்கள்களை சோதனை செய்ய (1) திரு.D. குமரன் (45/2024) த/பெ துரைகண்ணு, இளநிலை உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், காட்பாடி வேலூர் என்பவர் வசம் ரூ.440/-, (2) திரு.S. இளங்கோ (30/2024) த/பெ சண்முகாநந்தம், Data Entry Operator, சார் பதிவாளர் அலுவலகம், காட்பாடி வேலூர் என்பவர் வசம் ரூ.100/- மும், (3) திரு.L. ராஜாராம் (59/2024) த/பெ லட்சுமண கவுண்டர், அலுவலக உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், வேலூர் என்பவர் வசம் ரூ.350/- மும் வைத்திருந்தனர். மேற்படி பணத்திற்கு அவரவர் தக்க முகாந்திரம் தெரிவித்ததால் அப்பணம் அவரவர் வசமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதே போல் அலுவலக வளாகத்தில் இருந்த இடைத்தரகர்கள் மற்றும் பொது மக்களை திரேக சோதனை செய்ய (1) திரு. ஆசிப் அலி த/பெ முன்வர்அலி, ரிப்போட்டர், தின காற்று, வேலூர் என்பவர் வசம் ரூ.260/-, (2) திரு.ஸ்டான்லி பாஸ்கர் (46/2024) த/பெ தனசீலன், எண்.34/1, சலாம் ப்பாய் தெரு, காட்பாடி வேலூர் என்பவர் வசம் பணம் ஏதும் இல்லை (3) திரு.தர்மலிங்கம் (44/2024) த/பெ சிதம்பரம், மாரியம்மன் கோயில் தெரு, கார்ணாம்பட்டு, காட்பாடி, வேலூர் என்பவர் வசம் ரூ.1370/- மும், (4) திரு.மனோஜ் (51/2024) த/பெ பாநீராமுலு, எண்.94, மெட்டுகுளம், காட்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் வசம் ரூ.500/- (5) திரு.பால்தினகரன் (26/2024) த/பெ நோயல், எண்.39, கிருஸ்டியான்பேட்டை, சித்தூர் மெயின் ரோடு, காட்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் வசம் ரூ.1040/- (6) திரு.வெஸ்லி லார்சன் (28/2024) த/பெ ரிச்சர்டு,

எண்.239, வேலூர் சுகர் மில் வழி, ஏரந்தாங்கல் கிராமம் மற்றும் அஞ்சல், காட்பாடி தாலுக்கா, வேலூர் என்பவர் வசம் ரூ.200/- (7) திரு.கார்த்திகேயன் (25/2024) த/பெ உதயன், எண்.13, பெருமாள் நாயக்கர் தெரு, ராஜாஜி நகர், காட்பாடி, வேலூர் என்பவர் ரூ.100/- வும் வைத்திருந்தனர். மேற்படி பணத்திற்கு அவரவர் தக்க முகாந்திரம் தெரிவித்ததால் அப்பணம் அவரவர் வசமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தில் இருந்த திரு.அன்பு (62/2024) த/பெ கிருஷ்ணன், எண்.5, ராஜலிங்கம் நகர், கல்புதூர், காட்பாடி தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.1,35,000/- இருந்தது. அவர் மேற்படி பணம் ரூ.1,35,000/- ஆனது அவருடைய சொந்த பணம் என்றும் கூலி ஆட்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்தகாக தெரிவித்தார். இருப்பினும் அவர் கூறிய காரணம் ஏற்புடையதாக இல்லாததால் மேற்படி பணம் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதே போல் திரு.ஜெயகர் (45/2024) த/பெ கணேசன், எண்.14, பழனி நாடார் தெரு, தாராபடவேடு, காட்பாடி என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.25,000/- இருந்தது. அதுகுறித்து விசாரிக்க அதற்கு அவர் தான் காட்பாடியில் ஓட்டல் வைத்துள்ளதாகவும் அன்பு கவுன்சிலர் அவர்களுடன் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும், மேற்படி பணம் தான் நடத்தும் ஓட்டலுக்கு பொருட்கள் வாங்க வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். இருப்பினும் அவர் கூறிய காரணம் ஏற்புடையதாக இல்லாததால் மேற்படி பணம் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதேபோல் திரு.பாலாஜி என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.5,000/- இருந்தது. அதுகுறித்து விசாரிக்க அவர் அன்பு கவுன்சிலர் அவர்களுடன் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும், மேற்படி பணம் ரூ.5,000/- மாட்டிற்கு தீவணம் வாங்க வைத்திருந்ததாக தெரிவித்தார். இருப்பினும் அவர் கூறிய காரணம் ஏற்புடையதாக இல்லாததால் மேற்படி பணம் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதேபோல் திரு.சுரேஷ் என்பவரை விசாரிக்க தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் இடைதரகராக வேலை செய்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.6160/- இருந்தது அப்பணத்திற்கு உண்டான தக்க முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி பணம் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும் அப்பணத்துடன் இருந்த துண்டு சீட்டில் பத்திரம் 2,35,000 என முதல் வரியிலும் 3,15,000 என கடைசியாகவும் கருப்பு மையினால் எழுதப்பட்டது குறித்து கேட்க மௌனமாக இருந்தார். மேற்படி துண்டு சீட்டு துணைக்காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சார்பதிவாளர் திரு.நித்யானந்தம், இளநிலை உதவியாளர் திரு.குமரன் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. சார்பதிவாளர் அறையினை அடுத்து சுமார் 10X10 அளவு கொண்ட அறை காணப்பட்டது. அவ்வறையானது 5 கணினிகள் போடப்பட்டு ஆவணங்கள் ஸ்கேன் செய்வதற்காக பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேற்படி கணினி அறையினை அடுத்து சுமார் 10X15 அளவு கொண்ட உதவியாளர் அமரும் இருக்கையும் அறையிலிருந்து வடக்கில் சுமார் சுமார் 10X15 அளவு கொண்ட டைனிங் ஹால் காணப்பட்டது. மேற்படி அறைகளை சோதனை செய்ய வழக்கு சம்மந்தமான பணமோ, ஆவணங்களோ ஏதும் இல்லை. டைனிங் ஹாலினை அடுத்து வடக்கு பக்கம் ஆவண அறை காணப்பட்டது. மேற்படி அறையில் இரும்பு மற்றும் மரத்தாலான பெரிய பெரிய ரேக்குகளில் பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. மேற்படி ஆவண அறையினை சோதனை செய்ய தெற்குபக்க சுவற்றின் ஓரம் மரத்தாலான ரேக்கில் ஆவணங்களில் (1)

அட்டவணை II தொகுதி எண்.240 1980 ஆம் ஆண்டு கார்ணாம்பட்டு (கி) முதல் கொடுக்கன்தாங்கல் (கி) வரை என்று எழுதப்பட்டிருந்த பதிவேட்டில் பக்கம் எண்.1726 என்று கையால் எழுதப்பட்ட பக்கத்தில் பணம் ரூ.21,500/- மற்றும் 19.06.2024 Omm – Sakthi என்று சிகப்பு மையினால் எழுதி 5471 என்று ஆரம்பித்து அதன் பின்பக்கத்தில் 5524 என்ற எண் முடிய வரிசையாக எழுதப்பட்டு அதன் ஒவ்வொன்றிற்கும் நேர்எதிரே பல நபர்களின் பெயர்கள் கருப்பு மையினால் எழுதப்பட்ட சிறிய தாள் ஒன்றும், அதே போல் 18.06.2024 Omm – Sakthi என்று சிகப்பு மையினால் எழுதி 5456 என்று ஆரம்பித்து 5470 என்ற எண் முடிய வரிசையாக எழுதப்பட்டு அதன் நேர்எதிரே நபர்களின் பெயர்கள் கருப்பு மையினால் எழுதப்பட்ட சிறிய தாள் ஒன்றும், கருப்பு மையினால் வேலூர் என்று எழுதி அதன் தொடர்ச்சியாக சில நபர்களின் பெயர்கள் எழுதி அப்பெயர்களுக்கு நேர் எதிரே தொகைகள் கருப்பு மையினால் எழுதப்பட்ட சிறிய தாள் ஒன்றும், 31.05.2024 Omm – Sakthi என்று பச்சை நிற மையினால் எழுதி 4799 என்று ஆரம்பித்து 4854 என்ற எண் முடிய வரிசையாக எழுதப்பட்டு அதன் நேர்எதிரே நபர்களின் பெயர்கள் கருப்பு மையினால் எழுதப்பட்ட தாள் ஒன்றும் இருந்தது. மேற்படி தொகை குறித்து சார் பதிவாளர் திரு.நித்யானந்தம் அவர்களிடம் விசாரிக்க அப்பணம் குறித்து தனக்கு ஏதும் தெரியாது என்று கூறினார். மேற்படி 4 தாள்களில் துணைக்காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சார்பதிவாளர் திரு.நித்யானந்தம், இளநிலை உதவியாளர் திரு.குமரன் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும் தாள்களுக்கு இடையில் வைக்கப்பட்டிருந்த மேற்படி பணம் ரூ.21,500/- வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதேபோல் அட்டவணை II தொகுதி எண்.237, 1980 ஆம் ஆண்டு அம்முண்டி (கி) முதல் கண்டிபேடு(கி) வரை என்று எழுதப்பட்டிருந்த பதிவேட்டில் பக்கம் எண்.212 என்று கையால் எழுதப்பட்ட பக்கத்தில் பணம் ரூ.3,800/- இருந்தது. அது குறித்து சார் பதிவாளர் திரு.நித்யானந்தம் அவர்களிடம் விசாரிக்க அப்பணம் குறித்து தனக்கு ஏதும் தெரியாது என்று கூறினார். மேற்படி பணம் ரூ.3,800/- வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதேபோல் குகையநல்லூர் இறப்பு பதிவேடு என்று எழுதப்பட்டு கட்டப்பட்டிருந்த 14 பதிவேடுகளுக்கு கத்தையாக வைக்கப்பட்டிருந்த தொகையை எடுத்து எண்ணிபார்க்க அதில் பணம் ரூ.18,460/- இருந்தது. மேற்படி தொகை குறித்து சார் பதிவாளர் திரு.நித்யானந்தம் அவர்களிடம் விசாரிக்க அப்பணம் குறித்து தனக்கு ஏதும் தெரியாது என்று கூறினார். மேற்படி பணம் ரூ.3,800/- வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், சார் பதிவாளர் திரு.நித்யானந்தம் என்பவரிடம் அலுவலக ஊழியர்கள் வருகைப்பதிவேடு பற்றி கேட்க, காட்பாடி சார் பதிவாளர் அலுவலக பணியாளர்கள் வருகை பதிவேட்டினை ஆஜர் செய்தார். அதனை பார்வையிட ஜனவரி 2024 முதல் 19.06.2024 வரையிலான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அப்பதிவேட்டினை நகல் எடுத்து அதன் ஜீன் மாதத்திற்கான பதிவுகள் கொண்ட பக்கத்தில் துணைக்காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சார்பதிவாளர் திரு.நித்யானந்தம், இளநிலை உதவியாளர் திரு.குமரன் ஆகியோர் கையொப்பம் செய்து நகல் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், DATA ENTRY OPERATOR AND CAMERA OPERATOR ATTENDANCE REGISTER குறித்து கேட்க, அவர் அந்த பதிவேட்டை ஆஜர் செய்தார். அப்பதிவேட்டினை நகல் எடுத்து அதன்

ஜீன் மாதத்திற்கான பதிவுகள் கொண்ட பக்கத்தில் துணைக்காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சார்பதிவாளர் திரு.நித்யானந்தம், இளநிலை உதவியாளர் திரு.குமரன் ஆகியோர் கையொப்பம் செய்து நகல் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், சார் பதிவாளர் திரு.நித்யானந்தம் அவர்களிடம் அலுவலக பணியாளர்களின் தனி நபர் பண இருப்பு பதிவேடு பற்றி கேட்க, அவர் அந்த பதிவேட்டை ஆஜர் செய்தார். அதை பார்வையிட அது 03.01.2022 முதல் 19.06.2024 வரை இருந்தது. அதில் 01.03.2024 முதல் 19.06.2024 வரை பதிவுகள் இருந்ததை நகல் எடுத்து அதில் 19.06.2024 ஆம் தேதியன்று 1) து.குமரன், இளநிலை உதவியாளர் ரூ.440/- என்று எழுதப்பட்டு கையொப்பமிடபட்டும் (2) நித்யானந்தம், சார் பதிவாளர் பொறுப்பு ரூ.870/- என்று எழுதப்பட்டு கையொப்பமிடாமலும், அலுவலகத்தின் இருந்த பிற ஊழியர்கள் குறித்த பதிவுகள் ஏதும் அந்த பதிவேட்டில் இல்லை. அதன் 19.06.2024 பதிவுகள் கொண்ட பக்கத்தில் துணைக்காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சார்பதிவாளர் திரு.நித்யானந்தம், இளநிலை உதவியாளர் திரு.குமரன் ஆகியோர் கையொப்பம் செய்து நகல் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், சார் பதிவாளர் திரு.நித்யானந்தம் அவர்களிடம், காட்பாடி சார் பதிவாளர் அலுவலக "அ" கணக்கு பதிவேடு பற்றி கேட்க, அவர் அதை கணினியில் இருந்து 19.06.2024-ஆம் தேதி பதிவு செய்த ஆவணங்களின் பதிவினை 5 பக்கங்களை பிரிண்ட் அவுட் எடுத்து ஆஜர் செய்தார். அதை பார்வையிட, வரிசை எண்.01 முதல் வரிசை எண்.61 வரை பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் ஆவண எண், ஆவணத்தின் தன்மை, ஆவணத்தின் மதிப்பு அதற்காக செலுத்தப்பட்ட பதிவு கட்டணம், முத்திரைதாள் வாங்கப்பட்ட விவரங்கள், மின்னனு முறையில் செலுத்தப்பட்ட முத்திரை தீர்வை தொகை விவரங்கள் ஆகிய விவரங்கள் காணப்பட்டது. அதன் 5 வது பக்கத்தில் துணைக்காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சார்பதிவாளர் திரு.நித்யானந்தம், இளநிலை உதவியாளர் திரு.குமரன் ஆகியோர் கையொப்பம் செய்து நகல் வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், சார் பதிவாளர் அவர்களிடம், காட்பாடி சார் பதிவாளர் அலுவலக "D" கணக்கு பதிவேடு பற்றி கேட்க, அவர் அதை கணினியில் இருந்து 19.06.2024-ஆம் தேதி பதிவு செய்த ஆவண விவரங்களை பிரிண்ட் அவுட் எடுத்து ஆஜர் செய்தார். அதை பார்வையிட, மூன்று தாள்களை கொண்டதாகவும், வரிசை எண்.01 முதல் வரிசை எண்.39 வரை உள்ளதில், வரிசை எண்.01-ல் பொதுத்தேடுதல் எண்.ECA/689/2024 முதல் வரிசை எண்.39-ல் எண்.ECA/121832741/2024 என இருந்தது. அதன் 3வது தாளில் துணைக்காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சார்பதிவாளர் திரு.நித்யானந்தம், இளநிலை உதவியாளர் திரு.குமரன் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், சார் பதிவாளர் அவர்களிடம், காட்பாடி சார் பதிவாளர் அலுவலக "H" கணக்கு பதிவேடு பற்றி கேட்க, கணினியில் இருந்து பிரிண்ட் எடுத்து ஒரு தாளினை ஆஜர் செய்தார். அந்த தாளில் துணைக்காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சார்பதிவாளர் திரு.நித்யானந்தம், இளநிலை உதவியாளர் திரு.குமரன் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், சார் பதிவாளர்

திரு.நித்யானந்தம் அவர்களிடம், இன்றைய Sub Division Account காட்பாடி குறித்து கேட்க கணினியில் இருந்து பிரிண்ட் எடுத்து ஒரு தாளினை ஆஜர் செய்தார். அத்தாளினை பார்வையிட அதில் வரிசை எண். 1 முதல் 22 வரை காணப்பட்டது. அந்த தாளில் துணைக்காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சார்பதிவாளர் திரு.நித்யானந்தம், இளநிலை உதவியாளர் திரு.குமரன் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், சார் பதிவாளர் திரு.நித்யானந்தம் அவர்களிடம், 19.06.2024 அன்று பிறப்பு இறப்பு கட்டண பதிவு குறித்து கேட்க கணினியில் இருந்து பிரிண்ட் எடுத்து ஒரு தாளினை ஆஜர் செய்தார். அந்த தாளில் துணைக்காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சார்பதிவாளர் திரு.நித்யானந்தம், இளநிலை உதவியாளர் திரு.குமரன் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. முன்னாள் படைவீரர் கொடிநாள் வசூல் தொகை குறித்து விசாரிக்க, தனக்கு ஜீன்-2024 முதல் ரூ.2,50,000/- கொடிநாள் வசூல் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதாகவும், தற்போது வரை ரூ.6,400/- வசூல் செய்யப்பட்டிருப்பதாகவும், வசூல் செய்யப்பட்ட தொகை 19.06.2024 அன்று Data Entry Operator திரு.இளங்கோ என்பவர் மூலம் முன்னாள் படைவீரர் நலத்துறை கணக்கில் ரசீது எண். FA/FUND/193762 ன் மூலம் செலுத்தப்பட்டு விட்டதாக அதற்கான ஒப்புகை சீட்டினை கணினியில் இருந்து பிரிண்ட் எடுத்து ஆஜர் செய்தார். அந்த தாளில் துணைக்காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் சார்பதிவாளர் திரு.நித்யானந்தம், இளநிலை உதவியாளர் திரு.குமரன் ஆகியோர் கையொப்பம் செய்து வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும், காட்பாடி சார் பதிவாளர் அலுவலக நிரந்தர இருப்பு தொகை ரூ.250/- இருப்பில் இருந்தது. ஆனால் அதற்குண்டான பதிவேட்டினை அவர் ஆஜர் செய்யவில்லை. மேற்படி இரு துறை திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட தக்க முகாந்திரம், உரிமை கோராத பணம் ரூ.2,14,920/- குறித்தும், சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த ஆவண எழுத்தர்களின் உதவியாளர்கள், இடைதரகர்கள் ஆகியோர்கள் இருந்தது பற்றியும், சார் பதிவாளர் திரு.நித்யானந்தம் அவர்களிடம் கேட்க, அவர் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேலும் 19.06.2024 பதிவு செய்த ஆவணங்கள் குறித்து தகவலின் பேரில் இடைத்தரகர் திரு.சதீஸ் என்பவர் சம்மந்தமாக திரு.நித்யானந்தம் அவர்களிடம் விசாரிக்க, அவர் திரு.சதீஸ் என்பவர் ஆவண எழுத்தர் திரு.மணிவண்ணன் என்பவரின் உதவியாளராக வேலை செய்து வருவதாகவும் அவர் இன்று SRO அலுவலகத்திற்கு வந்து சென்றதாகவும் அவருடைய ஆவணம் ஏதும் பதிவு செய்யவில்லை என்றும் தெரிவித்தார். மேலும் அவர் தன்னை அனுமதித்தால் திரு.சதீஸ் என்பவரை SRO அலுவலகத்திற்கு செல்போனில் அழைப்பதாக தெரிவித்து அவருக்கு தொடர்பு கொண்டார். அதனை தொடர்ந்து திரு.சதீஸ் என்பவர் SRO அலுவலகத்திற்கு வந்தார். அவரிடம் இன்று SRO அலுவலகத்திற்கு வந்து சென்றது சம்மந்தமாக விசாரிக்க தான் இன்று ஒரு ஆவண பதிவு சம்மந்தமான விவரம் கேட்க வந்ததாகவும் மற்றபடி தனக்கு எதுவும் தெரியாது என்றும் SRO அழைத்ததால் தான் வந்தேன் என்றும் தெரிவித்தார். பிறகு அவரிடம் எழுதி வாங்கிக் கொண்டு திரும்ப அனுப்பப்பட்டது. சார்பதிவாளர் திரு.நித்யானந்தம் அவர்களிடம் இவ்வலுவலக CCTV குறித்து கேட்க அலுவலகத்தில் பணிபுரியும் திரு.மகேந்திரகுமார் என்பவர்தான்

உபயோகிப்பார் என்று தெரிவித்தார். உடனே மகேந்திரகுமார் என்பவரை அலுவலகத்திற்கு வந்து இன்றைய CCTV பதிவினை Copy செய்து கொடுக்குமாறு கேட்க திரு.நித்யானந்தம் அவர்கள் மகேந்திரகுமார் என்பவருக்கு தகவல் தெரிவித்தார். மேற்படி மகேந்திரகுமார் அலுவலகத்திற்கு வந்து 19.06.2024 அன்று முதல் சோதனை முடியும் வரையிலான பதிவுகளை Pen Drive-ல் Copy செய்து கொடுத்தார். இந்த இருதுறை திடீர் சோதனையில், தக்க முகாந்திரம் கூறாத, உரிமை கோராத பணம் ரூ.2,14,920/- மற்றும் ஆவணங்களும் திடீர் கூட்டு சோதனை நிமித்தமாக கைப்பற்றப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது, 20.06.2024-ஆம் தேதி சுமார் 03.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு சோதனை சம்மந்தமான விரிவான செயல்முறை 19.06.2024 அன்று 19.15 மணி முதல் தயார் செய்யப்பட்டு 20.06.2024 அன்று 03.00 மணிக்கு முடிக்கப்பட்டு அதன் நகல் திரு.நித்யானந்தம், சார் பதிவாளர், காட்பாடி அவர்களுக்கு வழங்கி ஒப்புதல் பெறப்பட்டது. மேற்படி காட்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம், பிற பதிவுகள் மற்றும் சான்றிதழ்கள் பெற வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக சார் பதிவாளர் பதிவு செய்யப்படும் பத்திர மதிப்புகளுக்கு ஏற்பவும், அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைதரகர்கள் (புரோக்கர்கள்) மூலமும் கையூட்டு பெறும் காட்பாடி சார் பதிவாளர் திரு.நித்யானந்தம் என்பவர் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட லஞ்ச பணம் ரூ.2,14,920/-யும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் கூட்டு சோதனையின் போது தயார் செய்யப்பட்ட அசல் செயல்முறை ஆகியவற்றையும் தங்களிடம் உரிய நடவடிக்கைக்காக ஒப்புவிக்கிறேன். sd/- xxxxxx, 20/6/24 (V.பூமா), துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர்

Inspr, Tr.S.Vijay, to register a case under the appropriate section of law and take up the investigation. sd/- xxxxxx 20/6/2024 DSP/V&AC/VL

Sir,

Received the complaint on 20.06.2024 at 04.45 hrs. and registered a case in Vellore Vigilance and Anti-Corruption Cr.No.05/2024, u/s 7(a) of Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w. 102 CrPC on 20.06.2024 at 05.00 Hrs. The original FIR along with complaint of Tmt.Booma, Deputy Inspection Cell Officer dated 20.06.2024 and Original Joint Surprise Check Proceedings dated 19&20/06/2024 is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Vellore and copy of the FIR is sent to the officers concerned.

20/06/2024
(C.S.VIJAY)
INSPECTOR/V&AC
VELLORE.